செ.வெ.எண்: 91ந்ல் **பத்திரிக்கை செய்தி** நாள்: 08/12/17

கன்னியாகுமரி மாவட்டத்தில் தற்போது 01.01.2018-ஐ தகுதி நாளாக கொண்டு (03.10.2017 முதல் 31.10.2017 வரை) நடைபெற்று வரும் வாக்காளர் பட்டியல் சிறப்பு சுருக்க முறைத் திருத்தம் 2018, 31.10.2017 தேதியில் இருந்து 30.11.2017 தேதி வரை இந்திய தேர்தல் ஆணைய உத்தரவின்படி நீட்டிக்கப்பட்டிருந்தது. தற்போது இந்திய தேர்தல் ஆணைய உத்தரவின்படி வாக்காளர் பட்டியலில் பெயர் சேர்த்தல், நீக்கலுக்கான கால அவகாசம் 15.12.2017 வரை நீட்டிக்கப்பட்டுள்ளதால், பொதுமக்கள் வாக்காளர் பட்டியலில் பெயர் சேர்த்தல், நீக்குதல், திருத்தங்கள் மேற்கொள்ளுதல் ஆகியவற்றிற்கான விண்ணப்ப படிவங்களை சம்பந்தப்பட்ட பகுதிக்கான வாக்குச்சாவடி நிலை அலுவலர்கள் வீடு வீடாகச் சென்று சிறப்பு ஆய்வுப்பணி மேற்கொள்ளும்பொழுது பெற உள்ளனர். 2017 நவம்பர் மாதம் முதல் அனைத்து வாக்குச் சாவடி நிலை அலுவலர்களும் அவர்களுக்குரிய பகுதியில் ஒவ்வொரு வீடாக சென்று வாக்காளர் பட்டியலில் விடுபட்டுள்ள நபர்களிடம், பெயர் சேர்த்தல் செய்வதற்கு படிவம் 6, நிரந்தரமாக அல்லது தற்காலிகமாக மூன்று மாதங்களுக்கு மேல் குடியிருப்பு மாறி சென்றவர்கள், இறப்பு இனங்கள் ஆகியவற்றிற்கு படிவம் 7, புகைப்பட மாற்றம், பெயர் திருத்தம் போன்ற திருத்தங்கள் மேற்கொள்வதற்கு படிவம் 8, ஒரே தொகுதிக்குள் வேறு பாகத்திற்கு முகவரி மாற்றம் தொடர்பாக படிவம் 8ஏ, அயல்நாடு வாழ் இந்தியர்களுக்கு படிவம்-6A ஆகியவற்றிலும் மற்றும் 01.01.2019 தேதியினை தகுதிநாளாக கொண்டு தகுதியுடைய நபர்கள் விவரங்களையும், குடும்பத்தினரின் செல்லிடப்பேசி எண், மின்அஞ்சல் முகவரி ஆகியவைகளை வாக்குச்சாவடி நிலை அலுவலர்கள் சேகரித்து வருகின்றனர். குடியிருப்பு பகுதியின் அட்சரேகை, தீர்க்கரேகை ஆகியவற்றை கைபேசி செயலி மூலம் பதிவேற்றம் செய்யவும் உள்ளனர். எனவே பொதுமக்கள் இந்த வாய்ப்பை பயன்படுத்திக் கொள்ளுமாறும், பணிமேற்கொள்ளவிருக்கிற வாக்குச்சாவடி நிலை அலுவலர்களுக்கு உரிய ஒத்துழைப்பு நல்கிடுமாறும் கேட்டுக்கொள்ளப்படுகின்றார்கள்.

இறுதி வாக்காளர் பட்டியல் 10.01.2018 அன்று வெளியிடப்படவுள்ளது. இந்த வாக்காளர் பட்டியலில் புதிதாக பெயர் சேர்க்க விண்ணப்பித்தவர்களின் பெயர்கள், இறந்த மற்றும் இடம்பெயர்ந்த வாக்காளர்களின் பெயர்கள் இடம்பெறும். பொதுமக்கள் அனைவரும் வாக்காளர் பட்டியல் வெளியிட்டவுடன், அந்தந்த வட்டாட்சியர் அலுவலகத்தில் பார்வைக்கு வைக்கப்படும் பட்டியலில் பார்த்து தெரிந்து கொள்ளும்படி கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

வெளியீடு:
செய்தி-மக்கள் தொடர்பு அலுவலர்
நாகர்கோவில்

8/12/17

மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும்
மாவட்ட ஆட்சித்தலைவருக்காக,
கன்னியாகுமரி மாவட்டம்.